**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.**

Case No. S.C. No.223/2020
Prosecution side witness for P.W.18

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. சார்லஸ்** | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **10.06.2026**

A1 to A3 present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2019 ம் வருடம் தூத்துக்குடி மாவட்டம் தாளமுத்துநகர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தபோது கடந்த 6.7.2019 அன்று தருவைக்குளம் கடல்சார் காவல்நிலையத்தில் அந்தோணி மகாராஜா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவின் தன்மைக்கு ஏற்ப தருவைக்குளம் கடல்சார் காவல்நிலைய குற்ற எண்.9/2019 சட்டப்பிரிவில் Man missing வழக்கை எடுத்து உதவிஆய்வாளர் திரு.ஜானகிராமன் என்பவர் வழக்கை பதிவு செய்து வழக்கின் கோப்பை ஆய்வாளர் நவீன் என்பவர் வசம் ஒப்படைக்க முதல்கட்ட புலன் விசாரணையில் இந்த வழக்கில் காணாமல் போன அந்தோணி சின்னத்துரையின் உடல் ராமநாதபுரம் நரிப்பையூர் அருகே கடலோரத்தில் கரை ஒதுங்கியதால் தருவைக்குளம் கடல்சார் காவல்நிலைய குற்ற எண்.9/2019 சட்டப்பிரிவு Man Missing வழக்கை 174 crpc ஆக மாற்றம் செய்து முதற்கட்ட விசாரணைக்கு எடுத்து தூத்துக்குடி நகர உட்கோட்ட அலுவலக சி பிரிவு நம்பர் 258/camp/SDO/town/tuty/2019 ன் பிரகாரம் தருவைக்குளம் கடல்சார் காவல்நிலையத்தில்

இருந்து வரபெற்ற குற்ற எண்.9/2019 u/sec man missing @ 174 crpc வழக்கின் கோப்பை பார்வையிட்டு தாளமுத்து நகர் காவல்நிலைய உதவி ஆய்வாளர் தாமஸ் என்பவர் நிலைய குற்ற எண்.165/2019 U/sec man missing @ 174 crpc ஆக 10.7.2019 காலை 10.00 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டு எனது விசாரணைக்கு வைத்தார். எனது பார்வைக்கு வைக்கப்பட்ட வழக்கு கோப்பினை 10.7.2019 காலை சுமார் 9.15 மணிக்கு நிலையத்தில் வைத்து கொண்டு கோப்பை பார்வையிட்டு அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சென்று இறந்து போன அந்தோனி சின்னத்துரை என்பவர் தலை மற்றும் முகத்தில் ஏற்பட்ட காயத்தினால் இறந்திருக்கலாம், இருந்தபோதிலும் அவர் உடல் உள்ளுறுப்புகளை இரசாயன பரிசோதனைக்கு அனுப்பி வைத்து பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் சுடலைமுத்து என்பவர் கொடுத்த பிரேத பரிசோதனை சான்றிதழை கிடைக்கபெற்று மேற்படி மருத்துவ அதிகாரியை தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை நீதிமன்றத்தில் காட்டப்படும் அ.சா.ஆ.2 தான். பின்பு நிலையம் வந்து மேற்படி மருத்துவ அதிகாரி வழங்கிய சான்று மற்றும் வாக்குமூலத்தின் அடிப்படையில் இவ்வழக்கின் சட்டப்பிரிவினை man missing @ 174 crpc வழக்கினை 302 இ.த.ச ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். அது நீதிமன்றத்தில் காட்டப்படுவது அ.சாஆ.19. நிலையத்தில் கோப்புகளை பார்வையிட்டு கொண்டிருந்தபோது அன்றைய தினமே காலை சுமார் 12.00 மணிக்கு சாட்சி கீழ அரசலடி கிராம நிர்வாக அலுவலர் திரு. வீரமாமுனிவர் மற்றும் கீழ அரசலடி பஞ்சாயத்து செயலர் திரு.பழனிமுருகன் ஆகியோர்கள் நிலையம் வந்து இவ்வழக்கின் ஆஜர் எதிரி அந்தோணி மகாராஜா மற்றும் ரெக்சிலின் மேரி ஆகியோர்களை தனி அறிக்கை உடன் அந்தோணி மகாராஜாவின் ஒப்புதல் வாக்குமூலத்துடன் நிலையத்தில் ஆஜர் செய்தார். அந்த வாக்குமூலம் நீதிமன்றத்தில் காட்டப்படும் அ.சா.ஆ−5 தான். தனி அறிக்கை நீதிமன்றத்தில் காட்டப்படும் அ.சா.ஆ−6 தான். மேற்படி எதிரிகளை கைது செய்து

மேற்படி ஆஜர் சாட்சிகளின் முன்னிலையில் எவ்வித தூண்டுதலோ துன்புறுத்தலோ இன்றி விசாரிக்க எதிரி அந்தோணி மகாராஜா ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்து சாட்சிகள் மற்றும் எதிரி நானும் கையொப்பம் இட்டேன். எதிரி அந்தோணி மகாராஜா ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்து சாட்சிகள் மற்றும் எதிரி நானும் கையொப்பம் இட்டேன். பின்னர் எதிரி ரெக்சிலின் மேரி என்பவரை விசாரிக்க அவரும் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை எதிரி அந்தோணி மகாராஜா ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்து சாட்சிகள் மற்றும் எதிரி நானும் கையொப்பம் இட்டேன். பின்பு 1ம் எதிரி அந்தோணி மகாராஜா கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்கின் சட்டப்பிரிவினை Man missing @ 174 crpc @ 302 @ 302, 120(b) இ.த.ச ஆக சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பினேன். அதற்கான சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை நீதிமன்றத்தில் காட்டப்படுவது அது அ.சாஆ.20 ஆகும். பின்னர் 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அன்றைய தினம் 16.15 மணிக்கு எதிரி மற்றும் சாட்சிகளுடன் வெள்ளப்பட்டி கடற்கரையில் இறந்து நபரை போட்டில் வைத்து எதிரி எடுத்து ஆஜர் செய்த சுமார் 121 செ.மீ நீளமும், 12 செ.மீ விட்டமும் உள்ள சவுக்கு கம்பு ஒன்றினை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினேன். அதற்கான அத்தாட்சி நீதிமன்றத்தில் காட்டப்படுவது அது அ.சா.ஆ–7 ஆக குறியீடு செய்யப்பட்டது தான்.பின்பு 2ம் எதிரி ரெக்சிலின் மேரி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி மற்றும் சாட்சிகளுடன் அதே கடற்கரையில் வைத்து இறந்தநபரின் போட்டை எதிரி அடையாளம் காட்டி ஆஜர் செய்ததை அன்றைய தினம் 17.00 மணிக்கு அதே சாட்சிகள் முன்பு அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி ஏற்கனவே அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டது தான் 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி நீதிமன்றத்தில் காட்டப்படும்

அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டதுதான். 2ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி நீதிமன்றத்தில் காட்டப்படும் அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்பட்டதுதான். பின்னர் எதிரிகள் மற்றும் சாட்சிகள் மற்றும் தடைய பொருட்களுடன் நிலையம் வந்து எதிரிகளை தகுந்த காவலர்கள் மூலம் பிரேத பரிசோதனை செய்து பாராவசம் ஒப்படைத்து நிலைய பதிவேடுகளில் பதிவு செய்தேன். கைது செய்யும் போது உடனிருந்த சாட்சிகளான வீரமாமுனிவர் மற்றும் பழனிமுருகன் மற்றும் வழக்கினை பதிவு செய்த உதவி ஆய்வாளர் திரு.தாமஸ் என்பவரையும் தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கொண்டேன். எதிரிகளை தக்க வழிக்காவல் மூலம் தடையச்சொத்துக்களை படிவம் 91 மூலமும் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் எதிரி ரெக்சிலின் மேரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையிலும் பிரேத பரிசோதனை அடிப்படையிலும் சாட்சிகளின் வாக்குமூலங்களின் அடிப்படையிலும் விசாரணையின் அடிப்படையிலும் 3ம் எதிரியின் தூண்டுதலின் பேரில் 1ம் எதிரி குற்ற செயல் புரிந்தது தெரியவந்ததால் 3ம் எதிரியை தேடி வந்த நிலையில் எனது தொடர் புலன் விசாரணையாக 12.7.2019 அன்று நிலையத்தில் இருக்கும்போது சாட்சிகள் பூரண சுரேஷ், ஞான சேகர், ஜோதிமணி ஆகியோர்கள் நிலையம் ஆஜரோனர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகள் மூவரும் கொலை சம்பவத்தை கண்ணால் பார்த்ததை பற்றி கூறினார்கள். பின்பு தொடர் புலன் விசாரணையாக 13.7.2019 அன்று நிலையத்தில் இருக்கும்போது சாட்சிகள் ரவி மற்றும் செல்வராஜ் இருவரும் நிலையம் ஆஜர் ஆனவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். தொடர் புலன் விசாரணையாக 14.07.2019 அன்று சாட்சிகள் ஜான்சி மேரி, லலிதா, பால்தாய் ஆகிய மூவரும் நிலையம் ஆஜராகி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். தொடர்ச்சியாக அன்றைய தினமே 3ம் எதிரியை இவ்வழக்கில் சேர்ப்பதற்காக வேண்டுகோள் கடிதம் நீதிமன்றத்திற்கு வழங்கினேன். அந்த அறிக்கை நீதிமன்றத்தில் காட்டப்படுவது அ.சா.ஆ–21 ஆகும். தடையசொத்துக்களை

படிவம் 91 மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 நீதிமன்றத்தில் காட்டப்படுவது அ.சா.ஆ–22 (வரிசை 2 எண்ணம்). அந்த சான்று பொருட்கள் நீதிமன்றத்தில் காட்டப்படும் சா.பொ.1,2 தான். பின்னர் எனக்கு பணி மாறுதல் உத்தரவு வந்துவிட்டதனால் வழக்கு கோப்பினை தொடர் புலன் விசாரணைக்காக ஆய்வாளர் திரு. தங்க கிருஷ்ணன் அவர் வசம் ஒப்படைத்தேன். எனது விசாரணையில் முந்தைய ஆய்வாளர் விசாரணையிலும் அ.சா.ஆ–1 ஜான்சி மேரி இந்த வழக்கு சம்பவம் பற்றியும் இறந்தநபரான தனது தம்பி தன்னிடம் கூறிய விவரங்களையும் வாக்குமூலத்தில் உள்ளவாறு தான் கூறியுள்ளார். அ.சா.2 பூரண சுரேஷ் அ.சா.3 ஞானசேகர், அ.சா. 4 ஜோதிமணி ஆகியோர்கள் இந்த வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்தது பற்றி வாக்குமூலத்தில் உள்ளவாறு தான் கூறியுள்ளார்கள். அ.சா.5 செல்வராஜ் 2வது எதிரியும் 3வது எதிரியும் 1வது எதிரியை கொன்று சின்னத்துரையை கொல்ல சதித்திட்டம் தீட்டியது பற்றி வாக்குமூலத்தில் உள்ளவாறு தான் கூறியுள்ளார். அ.சா.6 லலிதா, அ.சா.7 பால்தாய் ஆகியோர்கள் இந்த வழக்கு சம்பவத்தை கேள்வி பட்டது பற்றி வாக்குமூலத்தில் உள்ளவாறு தான் கூறியுள்ளார். அ.சா.8 அனிஸ்டன் , அ.சா.9 சுசி (எ) அந்தோணி முத்து ஆகியோர்கள் 1ம் எதிரி அந்தோணி மகாராஜாவை கடலில் இருந்து காப்பாற்றியது பற்றியும் வழக்கு சம்பவத்தை கேள்விப்பட்டது பற்றியும் வாக்குமூலத்தில் உள்ளவாறு தான் கூறியுள்ளார்கள். அ.சா10 அந்தோணி தொம்மை ராயப்பன் 1ம் எதிரி அந்தோணி மகாராஜாவை துாத்துக்குடி AVM மருத்துவமனையில் சிகிச்சை சேர்த்தது பற்றியும் வழக்கு சம்பவத்தை கேள்விப்பட்டது பற்றியும் வாக்குமூலத்தில் உள்ளவாறு தான் கூறியுள்ளார்கள்.

<u>எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை</u>

வழக்கு கோப்பை எந்த தேதியில் எங்கு வைத்து எத்தனை மணிக்கு பெற்றுகொண்டேன் என்றால் 10.07.2019 காலை 9.15 மணியளவில் நிலையத்தில் வைத்து பெற்று கொண்டேன். தாளமுத்துநகர் காவல்நிலையத்தில் குற்ற எண்.165/2019 ல் சம்பவம் நடைபெற்று 4 நாட்கள் காலதாமதமாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவமானது 6.7.2019 அன்று தான்

நடைபெற்றுள்ளதாக முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை 10.07.2019 அன்று தான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். காலம் 8 ல் காலதாமதத்திற்கான காரணம் எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி காலதாமதத்திற்கான காரணத்தை முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் தாமஸை அறிந்து தெரிந்து கொண்டேனா என்றால் காலதாமதத்திற்கான காரணம் சி நம்பர் 258/camp/SDO/town/tuty/2019 dated 10.07.2010 ன் பிரகாரம் காலதாமதத்திற்கான அனைத்து காரணங்களும் அந்த ஆவணத்தில் இடம் பெற்றிருந்தது. அந்த செயல்முறை ஆணை எண்ணை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேன். அதனால் நான் உதவி ஆய்வாளரை விசாரிக்கவில்லை. பொதுவாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு நிகழ்நிலை புகார்தாரரிடம் கையொப்பம் பெற்று அவருக்கு நகல் வழங்கப்படும் என்றால் சரிதான். ஆனால் இந்த வழக்கில் மனுதாரருடைய மனு தருவைக்குளம் கடல்சார் காவல்நிலையத்தில் பதிவு செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்பட்டு பின்பு தாளமுத்து நகர் காவல்நிலையத்தில் குற்ற எண்.165/2019 பதிவு செய்யப்பட்ட காரணத்தினால் முதல் தகவல் அறிக்கையில் அவருடைய கையொப்பம் பெறப்படவில்லை. மேற்படி முதல் தகவல் அறிக்கையின் நகல் அசல் புகார்தாரருக்கு சார்பு செய்யப்பட்டுள்ளதா என்றால் சார்பு செய்யப்பட்டது. மேற்சொன்னவாறு சார்பு செய்யப்பட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் தருவைக்குளம் கடலோர காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த மற்றும் முதல் விசாரணை மேற்கொண்ட அலுவலரை சாட்சியாக விசாரணை செய்யவில்லை என்றால் முதல் கட்ட புலன் விசாரணை அதிகாரி என்ற காரணத்தினாலும் என்னுடைய முதல்கட்ட புலன் விசாரணை குறுகிய நாட்களில் நடைபெற்ற காரணத்தினாலும் அந்த குறுகிய நாள்களுக்கு பிறகு நான் மாறுதலில் சென்ற காரணத்தினால் என்னால் விசாரிக்க இயலவில்லை. இந்த வழக்கில் தருவைக்குளம் காவல்நிலையத்தில் இருந்து வரப்பெற்ற சி நம்பர்

258/camp/SDO/town/tuty/2019 ன் படி தருவைக்குளம் கடலோர காவல்நிலைய குற்ற எண்.9/2019 ல் இவ்வழக்கு சம்மந்தமாக யாரையும் விசாரித்து வாக்குமூலம் பெறப்பட்டிருந்ததா என்றால் இல்லை. இந்த வழக்கில் எதிரிகளை எதன் அடிப்படையில் இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் இந்த வழக்கில் 1,2 எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். கிராம நிர்வாக அதிகாரி தனிஅறிக்கையை காவல் நிலையத்திற்கு வருவதற்கு முன்பு எழுதி கொண்டுவந்தாரா அல்லது காவல்நிலையத்தில் வைத்து எழுதினாரா என்றால் அவரது அலுவலகத்தில்வைத்து தனிஅறிக்கை மற்றும் வாக்குமூலங்கள் பெற்றுகொண்டு எதிரி மற்றும் வாக்குமூலங்களுடன் காவல்நிலையத்தில் ஆஜரானார். தனிஅறிக்கை காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றாலும் அதனால் தான் அதில் எதிரிகளை ஆஜர் செய்யும் தேதியும் நேரமும் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் காவல்நிலையத்தில் யார் எழுதினார்கள் என்றால் என்னால் எழுதப்பட்டது. தாளமுத்து நகர் காவல்நிலையத்தில் இருந்து வெள்ளப்பட்டி கடற்கரைக்கு செல்ல வேண்டும் என்றால் VAO அலுவலகத்தை தாண்டி தான் செல்லவேண்டும் என்றால் சரியல்ல. VAO வின் முத்திரை ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் இடப்படவில்லை என்றால் சரிதான். சா.பொ.1 கைப்பற்றிய அதே நேரத்தில் சா.பொ.2 கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. 2 வது எதிரியின் வாக்குமூலம் 10.7.2019 ல் கொடுத்திருக்கும்பட்சத்தில் 3 வது எதிரி குறித்து 19.7.2019 அன்று நீதிமன்றத்திற்கு அறிக்கை காலதாமதமாக கொடுத்ததற்கான காரணம் என்னவென்றால் குறிப்பிட்ட காரணம் எதுவுமில்லை. சாட்சிகளை முறையாக விசாரணை செய்யாமல் இவ்வழக்கில் எதிரிகளுக்கு வேண்டாத நபர்களின் தூண்டுதலின் பேரில் சாட்சிகளை விசாரணை செய்யாமல் வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு என்னால் எதிரிகளுக்கு எதிராக உருவாக்கப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல.